




திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை வட்டம், சித்தமல்லி

**ஸ்ரீ அபிராமி அம்பாள் ஸமேத ஸ்ரீ குலசேகர ஸ்வாமி திருக்கோயில்,**

**ஸ்ரீ ஸ்ரீதேவி, ஸ்ரீ பூதேவி சமேத ஸ்ரீ வரதராஜப்பெருமாள் திருக்கோயில்,**

சித்தமல்லி - அண்ணாநகர்

**ஸ்ரீ நீலகண்ட விநாயகர் ஆலய அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக பத்திரிகை**

ஸ்வவதி ஸ்ரீ விஸ்வாவசு வருடம்

ஆவணி மாதம் 26ஆம் தேதி (11.09.2025) வியாழக்கிழமை

கன்யா லக்னத்தில் அசுபதி நக்ஷத்திரம் கூடிய சுபயோக சுபவேளை காலை 7:30

மணிக்கு மேல் 8:30 மணிக்குள் ஸ்ரீ நீலகண்ட விநாயகர் கோயில்;

தொடர்ந்து துலா லக்னத்தில் அசுபதி நக்ஷத்திரம் கூடிய சுபயோக சுபவேளை காலை

9:00 மணிக்கு மேல் 10:00 மணிக்குள்

ஸ்ரீ ஸ்ரீதேவி, ஸ்ரீ பூதேவி சமேத ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆலய;

தொடர்ந்து விருச்சிக லக்னத்தில் அசுபதி நக்ஷத்திரம் கூடிய சுபயோக சுபவேளை காலை

10:30 மணிக்கு மேல் 11:30 மணிக்குள்

ஸ்ரீ அபிராமி அம்பாள் ஸமேத ஸ்ரீ குலசேகர ஸ்வாமி ஆலய



அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம்

ஓம் ஸ்ரீ குருப்யோ நமஹ:

ஹர ஹர சங்கர ஜெய ஜெய சங்கர





ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்

ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்

அவர்களின் அநுக்ரகத்துடனும்

ஸ்ரீ காஞ்சி காமகோடி மடம் 70-வது பீடம்

ஜகத்குரு ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

அவர்களின் ஆஞ்ஞையின்படியும், பரிபூரண அநுக்ரகத்துடனும்

ஸ்ரீ ஸ்ரீ ஸத்ய சந்திரசேகரேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களின் பரம அனுகிரஹத்துடனும் நடைபெறும்

## சித்தமல்லி

## ஸ்ரீ ஸ்ரீதேவி, ஸ்ரீபூதேவி சமேத ஸ்ரீவரதராஜப் பெருமாள் ஆலய;

## ஸ்ரீ அபிராமி அம்பாள் ஸமேத ஸ்ரீ குலசேகர ஸ்வாமி ஆலய;

## சித்தமல்லி-அண்ணாநகர் ஸ்ரீ நீலகண்ட விநாயகர் கோயில்

# அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம்

ஸ்வவதி ஸ்ரீ விஸ்வாவசு வருடம் ஆவணி மாதம் 26ஆம் தேதி (11.09.2025) வியாழக்கிழமை அசுபதி நக்ஷத்திரம் கூடிய சுபயோக சுபவேளை கூடிய சுபயோக தினத்தில் உதயாதி நாழிகை 4 நாழிகைக்கு மேல் 9 நாழிகைக்குள், காலை மணி 7:30 க்கு மேல் 11:30 மணிக்குள் கீழ்கண்ட நிகழ்ச்சி நிரலின்படி, அனைத்து ஆலய மூர்த்திகளுக்கும் அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம் நடைபெற இருப்பதால், பக்தகோடிகள் தவறாது கலந்துகொண்டு, விக்னேஸ்வரன்; தாயார், பெருமாள்; ஸ்வாமி, அம்பாளின் கடாட்சத்தை பெற்று, குருவருளும் பெற்று உய்யுமாறு இறைஞ்சுகிறோம்.


# தல புராணமும் வரலாறும்

## சித்தமல்லீஸ்வரர் கோவில்

### சித்தமல்லி – வெண்ணிக்கூற்றத்துறை - சுத்தமல்லி சதுர்வேதி மங்கலம்







சித்தமல்லீஸ்வரர் கோவில் 1000 ஆண்டுகளுக்கு மேல் பழமையானது. குலசேகர பாண்டியன் இந்த கோயிலை கட்டியதால் ஈசன் அவர் பெயராலேயே அழைக்கப்படுகிறார். அம்பாள் பெயர் அபிராமி. மேற்கு பார்த்த தலம். வடபுறம் தேவர் குளம் இருக்கிறது. அதில் ஏழு கிணறுகள் உள்ளன. இவை 7ம் ஏழு புண்ணிய நதிகளை குறிப்பதாகும். இன்றும் அந்த குளத்தை தேவர்குளம் என்றுதான் மக்கள் அழைக் கிறார்கள். மாசி மாதம் 21 லிருந்து 23ஆம் தேதி வரையில் சூரிய கதிர்கள் ஈசனை பூஜிக்கும் விதத்தில் லிங்கத்தின் மேல் பட்டு ஒளிர்கிறது.

திருவாரூர் மாவட்டத்தில் முத்துப்பேட்டையில் இருந்து மன்னார்குடி மார்க்கத்தில் 6 வது கிலோமீட்டரில் இந்த ஊர். 11 ஆம் நூற்றாண்டில் குலசேகர பாண்டியனால் கட்டப்பட்டது. கோயில். வெண்ணிக் கூற்றத்துறை சுத்தமல்லி என்கிறது வரலாறு. இவ்வூரில் சோழர்கள் காலத்தில் கிராம சபை நடந்ததாக அறியப்படுகிறது.

3 ம் ராஜராஜன், நாயக்க மன்னர்கள் பல திருப்பணிகளை செய்திருக்கிறார்கள். கிபி 1256 ஆம் ஆண்டு கால கல்வெட்டு ஒன்றில், "சோழ வளநாட்டு புரக்கரம்பை நாட்டு சித்தமல்லி சதுர்வேதி மங்கலத்து" என்று காணப்படுகிறது.

பஞ்சபாண்டவர்கள் தங்கள் வனவாச காலத்தில் இந்த காட்டுப் பகுதிக்கு வந்தனர். அவர்களுக்கு சிவ வழிபாடு செய்ய லிங்கத்தை தேடினார்கள் கிடைக்கவில்லை. "சித்தர்கள் தவமிருக்கும் இடத்தில் யாம் எழுந்தருளி உள்ளோம்" என்ற அசரீரி கேட்டது. சிவன் பாண்டவர்கள் கண்களுக்கு புலப்படாமல் விளையாட்டு காட்டினார். கோபம் கொண்ட அர்ச்சுனன் பாணத்தை விட்டான். அந்த பாணம் சிவலிங்கத்தின் திருமேனியில் பட்டது. அந்த வடுவை இன்றும் லிங்கத்தின் மீது காணலாம். பாண்டவர்களின் உள்ளங்களை அல்லிபோல் ஈசன் மலர வைத்ததால், சித்தம் + அல்லி = சித்தமல்லி என்று அழைக்கப்படுகிறது.

**எம பயம் போக்கும் அன்னை: அன்னை அபிராமி நான்கு திருக்கரங்களுடன் தெற்கு நோக்கி அருள்பாலிக்கிறாள். திருக்கடையூருக்கு அடுத்து இரண்டாவது அபிராமியாக திகழ்கிறாள். வலது காலை சிறிது முன்வைத்து கூப்பிட்ட குரலுக்கு உடனே வரும் நிலையில் இருப்பது அதிசயம். ஆயுள் அபிவிருத்தி அளிக்கும் திருக்கடையூருக்கு இணையான ஸ்தலம். மீனாட்சி சுந்தரேஸ்வரர், தட்சிணாமூர்த்தி, நர்த்தன விநாயகர், சுப்ரமண்யர், சண்டிகேஸ்வரர், பைரவர், சூரியன் நவக்கிரக சந்நிதிகளும் உள்ளன.**

- சித்தர்கள் பலர் இத்தலத்தில் வாழ்ந்திருந்ததால் சித்தமல்லி என்று அழைக்கப்படலாயிற்று என்றும் கூறுவார்.
- இந்த ஊரில் உள்ள கோயிலில் மட்டும்தான் கிணற்றுநீர் இளநீர் போன்ற சுவையுடன் இருக்கும் அதிசயம்.

**வெண்கல சத்தம்: தண்டாயுதபாணி கால்களில் பாதரட்சை அணிந்து, இடக்கையை இடுப்பில் வைத்து வலக்கையில் இருக்கும் தண்டத்தை பீடத்தில் ஊன்றியபடி சிரித்த முகத்தோடு காணும் அதிசயத்தையும் காணலாம். மொட்டைத்தலையுடன் கழுத்தில் ருத்ராட்சம் அணிந்துள்ளார். இவரது திருக்கரத்தில் இருக்கும் கல் தண்டத்தை சுண்டினால் வெண்கல ஓசை கேட்கிறது.**

திருமூலர் இங்கு தங்கி, கைலாசநாதரை வணங்கினார் என்று பாரம்பரியம் கூறுகிறது.

---

# ஸ்ரீ ஸ்ரீதேவி ஸ்ரீ பூதேவி சமேத ஸ்ரீ வரதராஜப்பெருமாள் கோயில்



சித்தமல்லியில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் வசித்துவந்த ஒரு விவசாயப் பெருங்கிழார் ஊழ்வினை காரணமாக பல்வேறு இன்னல்களுக்கு உட்பட்டு, ஒரு சமயத்தில் தீராத விரக்தியடைந்து கோபத்தில் தான் இல்லத்தில் பூசித்துவந்த ஸ்ரீதேவி, பூதேவி, வரதராஜ மூர்த்தங்களை கொல்லையில் வீசியெறிந்தார்.. சில நூற்றாண்டுகளாக, குவிந்த சேற்றின் எடையில் சிலைகள் கொல்லைப்புறத்தில் மூழ்கின. சிலைகள் மறக்கப்பட்டு, பல நூற்றாண்டுகளாக நிலத்தடி வாழ்க்கையை நடத்தின.

பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் அவ்வீட்டில் வசித்துவந்த சுந்தரநாராயணன் என்ற ஒரு நாத்திகவாதி கொல்லைப்புறத்தில் காய்கறிகளை வளர்க்கத் திட்டமிட்டார். தொழிலாளர்கள் கொல்லைப்புறத்தைத் தோண்டியபோது, பெருமாளும் தாயாரும் என்ற இரண்டு சிலைகளைக் கண்டனர். எனினும் சுந்தரநாராயணன் சிலைகளை யாருக்காவது, அல்லது கோயிலுக்காவது கொடுக்க விருப்பமில்லாமலேயே கொல்லைப்புறத்தில் வைத்திருந்தார். சிலைகள் மழையால், வெயிலால், காற்றால் அலைக்கழிக்கப்பட்டன. ஆனாலும் பிடிவாதமாக இருந்தார். காலம் உருண்டோடியது.


பெருமாளும் தனது தெய்வீக விருப்பத்தால் சித் கடாச்சத்தால் அவரை பக்திமார்க்கத்தில் இழுத்து தன் திருவிளையாடலை நிகழ்த்தினார். முன்பொரு காலத்தில் அர்ச்சாமூர்த்திகளை கொல்லைப்புறத்தில் வீசி எறிந்த அவருடைய மூதாதையரே இப்பொழுது அவராக இப்பிறவி எடுத்துள்ளர் எனவும், அப்பிறவி விரக்தி வாசனை இப்பிறவியில் நாத்திக வாசமாக தொடர்ந்தது  என்றும்; அப்பிறவியில் அவரது சகோதரியாக இருந்த ஆத்மா இப்பிறவியில்  அதே ஊரில் ‘பத்மா மாமி’யாக வேறொரு குடும்பத்தில் மறுபிறவி எடுத்திருப்பதாகவும் உணர்த்தினார்.

பின்னர் இவ்விருவரும் ஒருசேர திருப்பணி செய்து மூர்த்தங்களுக்காக 1920ல் இக்கோயிலை கட்டுவிக்கச்செய்தார்.

.

# ஸ்ரீ சுப்பிரமணிய யதீந்த்ராள் அதிஷ்டானம்

இந்த ஊரில் பிறந்த ஸ்ரீ சுப்பிரமணிய யதீந்த்ராள் என்பவர் காஞ்சிஸ்ரீ மகா பெரியவாளுக்கு பாடம் சொல்லி கொடுத்தவர். முன்னொரு காலத்தில் இந்த ஊர் அக்கரஹாரம் 'மூன்னூதி மங்கள அக்ரஹாரம்' என அழைக்கப்பட்டு இருக்கிறது. ஊரை சுற்றிலும் காடுகள். இவருடைய குரு **'மன்னார்குடி மஹாபெரியவா'** என்றறியப்பட்ட **'மன்னார்குடி ராஜு சாஸ்திரி'**களிடம் வேதம் பயின்றவர்.





1911 ஆம் ஆண்டு ஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள் மகேந்திரமங்கலத்தில் ஸ்ரீ காஞ்சி பெரியவாளுக்கு யஜுர் வேதத்தைக் கற்பிக்க ஆசிரியராக நியமிக்கப்பட்டார். பின்னர் மஹாப்பெரியவாளின் பக்கத்து அறையிலேயே தங்கி மடத்து கைங்கர்யத்திலும் ஈடுபட்டார். மகா பெரியவாளின் அத்யந்த சீடரானார்.

ஸ்ரீ அபிராம பட்டரின் ஏழாவது குருபரம்பரை! காஞ்சி பரமாச்சார்யாளின் வித்யாகுரு! பின்னர் அத்யந்த சிஷ்யர்!! மடத்திற்கென்று பலவருடங்கள் தன் நிலத்திலிருந்து கிடைத்த வருமானத்தை வழங்கியவர். பெரியவாளுடன் 1921 முதல் 1932 வரை கூடவே இருந்து அந்த ஞானகுருவை பாதுகாத்தவர். **பெரியவாளால் "லைப்ரரி" என்ற பட்டம் வாங்கியவர். "ஏகசந்தக்ரஹி" என்ற விருது வாங்கியவர்.** சித்தமல்லி, மன்னார்குடியில் வேத பாடசாலை நிறுவியவர்.

சுப்பிரமணிய சாஸ்திரிகள் வேதங்கள், உபநிடதங்கள் மற்றும் இந்து வேதங்கள் மற்றும் தத்துவத்தை ஏராளமான சீடர்களுக்குக் கற்பித்தார் - சில குறிப்பிடத்தக்க பெயர்கள் **ஸ்ரீரங்கம் ஆண்டவன் சுவாமிகள், சோமதேவ சர்மா, கருங்குளம் சாஸ்திரிகள், வேம்பு ஐயர்,** மற்றும் பலர்.

1920 ஆம் ஆண்டு சித்தமல்லியில் பெருமாள் கோயில் கட்டுவதற்கும் அவர் முக்கிய பங்கு வகித்தார். கோவிலூர், பெருகாவளந்தான், பாமணி போன்ற பல்வேறு கோயில் வாரியங்களில் அறங்காவலராகவும் பணியாற்றினார்.

**சாஸ்திரிகளின் புலமை மிகவும் பரந்த அளவில் இருந்தது, ஸ்ரீ மகாபெரியவா அவரை "நூலகம்" அல்லது "அறிவு கலைக்களஞ்சியம்" என்று அழைத்ததில் ஆச்சரியமில்லை. அவர் புகைப்பட நினைவாற்றல் கொண்டவராகவும், "ஏக சந்தா கிரஹி சன்னத்" (ஏக சந்தா கிரஹி என்பது ஒரு முறை மட்டுமே படிப்பதையோ அல்லது கேட்பதையோ நினைவில் வைத்திருக்கும் திறன்) என்றும் அழைக்கப்பட்டார்.**

சாஸ்திரிகள் எழுதிய நூல்கள் - ஸ்ரீ சந்திரசேகர அஷ்டகம், ஸ்ரீ குலசேகரஸ்வாமி ஸ்தோத்திரம், ஸ்ரீ சங்கரர் ஸ்துதி, காலடி சங்கர விஜயம், அபத்சன்யாச யோகா

1929ல் ஒரு உபன்யாச நிகழ்ச்சியில், மஹாபெரியவா இவரை தான் ஆற்றவேண்டிய உபன்யாசத்தை மேற்கொள்ளுமாறு பணித்து ஜபம் செய்யச் சென்று, முக்கால் மணி நேரத்திற்கு பின்னர் இவர் ஒரு பகுதியை பூர்த்தி செய்யும் வரை காத்திருந்து பின்னர் உபன்யாசத்தை தொடர்ந்து ஆற்றினதை பலரும் மெய்சிலிர்க்க நினைவு கூர்ந்திருக்கிறார்கள்.

இறுதியாக 1932ல் பெரியவாள் தஞ்சை விஜயத்தின்போது இவரை ஆலிங்கனம் செய்து ஆலிங்கன தீக்ஷை வழங்கி, ஆபத்ஸன்யாஸம் அளித்தார்.

1933 ஆம் ஆண்டு நவம்பர் 9 ஆம் தேதி வியாழக்கிழமை, அவர் இந்த உலகத்தை விட்டுப் பிரிவதாக மக்களிடம் கூறினார். ஜீவன் முக்தி அடைந்ததைக் கொண்டாடவும், குத்துவிளக்கு ஏற்றவும், மாவிலை, கோலம் போன்றவற்றால் வீடுகளை அலங்கரிக்கவும், அன்றைய தினம் புதிய ஆடைகளை அணியவும், அனைவரும் மகிழ்ச்சியாக இருக்கவும், இந்த விழாவைக் கொண்டாடவும் அவர் மக்களைக் கேட்டுக் கொண்டார். அவரது உடல் ஸ்ரீ குலசேகர சுவாமி கோயிலின் மேற்குப் பகுதியில் அடக்கம் செய்யப்பட்டது, அன்றிலிருந்து, ஆதிஷ்டானம் பொதுமக்கள் வழிபாட்டுத் தலமாக இருந்து வருகிறது.



1933 அக்டோபர் மாதம் ஐப்பசி கிருஷ்ண சஷ்டியன்று இறைவன் ஜோதியோடு கலந்தவர் - வேதபிராமணர்கள் பிரமுகர்கள் படை சூழ நிர்விகல்ப ஸமாதி ஆன வைபவம். அக்ஹாரம் அடைத்து பந்தல், தோரணம்வாழை மரம் நாதஸ்வரம் மேளதாளம் அமோகம் ஸமாதியில் பூத உடலை இறக்கி மடம் வேதபண்டிதர்கள் வேத கோஷத்துடன் ஜீவஸமாதி ஆனார். இவர் பூதவுடலை விட்டபோது காஞ்சியில் மஹாபெரியவா இதோ யதீந்திராள் கிளம்பிவிட்டார், இதோ போய்க்கொண்டிருக்கிறார் என்று வானத்தில் பார்த்து சிஷ்யர்களுக்கு சொன்னாராம். இதேபோல, பகவான் ஸ்ரீ ரமணர் முக்தியடைந்தபோதும் காஞ்சி மாமுனி அவர் வானுலகம் செல்வதை பார்த்து மற்றையோருக்கு சொன்னார் என்றும் வரலாறு.

1974ல் ஒரு சபையில் ஏதோ ஒரு விண்ணப்பத்திற்கு பதிலாக காஞ்சி மாமுனி மஹாபெரியவா அருளியது – "உங்க பெரியவா சித்தமல்லியில் இருக்கார்! அவாளிடம் போய் கேளுங்கோ அனுக்ரஹம் பண்ணுவார்"

அவர் வாக்குப்படி மனக்கலக்கம் தீர, இன்றும் யதீந்திராள் அதிஷ்டானத்திற்கு வந்து மனமுருக பிரார்த்தனை செய்யின் "சித்தமல்லி அடைந்தார் சித்தம் தெளிந்தார்" என்ற சொலவடைக்கு ஏற்ப சித்தம் தெளிவது அனுபவம்!

**தெளிவுதரு சித்தமல்லி – வளந்தரு சித்தமல்லி. வாழ்வுதரு சித்தமல்லி.**

இவ்விதம் பதினொன்றாம் நூற்றாண்டிலிருந்து இன்றுவரை போஷிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் இக்கோயில்களின் சந்நிதிகளுக்கு, இந்துசமய அறநிலையத்துறையின் மேற்பார்வையில் புதுக்குவிக்கும் கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு நடைபெற இருப்பது நம் பாக்கியமே!







சிவாலய காட்சி



சிவாலய காட்சி



சிவாலய காட்சி



ஸ்ரீ சுப்ரமண்ய யதீந்திராள் அதிஷ்ட்டானம்

## பணிந்துரை

यतो वाचो निवर्तन्ते । अप्राप्य मनसा सह ।
आनन्दं ब्रह्मणो विद्वान् । न बिभेति कुतश्चनेति ।
एत□ह वाव न तपति । किमह□साधु नाकरवम् ।
किमहं पापमकरवमिति । स य एवं विद्वानेते आत्मान स्पृणुते ।
उभे ह्येवैष एते आत्मान स्पृणुते । य एवं वेद । इत्युपनिषत्

- **तैत्तिरीयोपनिषत्** / *தைத்திரீய உபநிஷத்* **‖2-9‖**

***"பிரம்மத்தின் பேரின்பத்தை அறிந்தவன், வார்த்தைகளும் மனமும் சேர்ந்து அதை அடைய முடியாமல் விலகிச் செல்ல உந்துகையில் - அவன் எதற்கும் பயப்படுவதில்லை." "நான் ஏன் நல்லதைச் செய்யவில்லை? நான் ஏன் தீயதைச் செய்தேன்?" என்ற எண்ணத்தால் அவன் தன்னைத் துன்புறுத்திக்கொள்வதில்லை. இதை அறிந்த எவரும் இவை இரண்டையுமே ஆத்மாவாகக் கருதுகிறார்; உண்மையில் அவர் இவை இரண்டையும் ஆத்மாவாகப் போற்றுகிறார்.***

*தன் குருவின் குருவான காஞ்சி மாமுனி மஹாபெரியவாளின் பால்யத்தில் அவருக்கு வேதார்த்ததையும், வியாகர்ணத்தையும் போதித்த* ***சித்தமல்லி சுப்பிரமணிய சாஸ்திரி யதீந்திராளின்*** *அதிஷ்டானம் உறையும், அவருடைய பிறந்த ஊரான சித்தமல்லியில் இருக்கும் ஆலயங்களின் கும்பாபிஷேகப்பணிகளை நிறைவேற்ற என்னைப் பணித்த* ***ஸ்ரீ காஞ்சி காமகோடி மடம் 70-வது பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகளின்*** *கருணை மழையில் நனைந்து மெய் சிலிர்க்க அவர் பாதாரவிந்தங்களின் மேல் சிரம் தாழ்த்தி இப்பணியில் முனைந்தேன்,*

***திருக்கடையூர் அம்பாளின் பூரண அனுகிரஹத்தைப் பெற்றிருந்த ஸ்ரீ அபிராம பட்டரின் பரம்பரையில் வந்த சித்தமல்லி சுப்பிரமணிய சாஸ்திரி யதீந்திராளின் கொள்ளுப் பேத்தியான என்னிடம் இத்தகைய பணியை நல்கிய குருவிற்கு என் இதயாஞ்சலி என்றென்றும்...***

***பசுமை நிறை சித்தமல்லி சூழ் கழனிகளில் முப்போகமும் தளிர்த்து நிறை சூல் நெற்கதிர் செங்கதிரோன் தாள் வணங்கி நிற்பதுபோற், இம்மைக்கும், மறுமைக்கும், அப்பால் எம்மைக்கும் குருவின் அருள் நிறை அனுபூதி சுவீகரித்து முப்போகமும் ப்ரஹ்மமே அறுதியென தெளியும் வகையில்;***

*இப்பிறவியின் பயனாய் சமீபத்திய* ***நாகைக்காரோணம், திருவெண்காடு, திரு ஆனைக்கா இராஜேஸ்வரம்*** *உள்ளிட்ட கிட்டத்தட்ட முன்னூறு கோயில் குமாபிஷகங்களையும், வருடாவருடம் நடந்தேறும்* ***புண்ணிய நதி புஷ்கரங்களை ஒருங்கிணைத்து*** *நடத்தும் பேரினை நல்கி வழிநடத்தி, அதன் வாயிலாக கிடைக்கும் ஆத்மானுபவ சந்துஷ்டியால்; சித்தமல்லி கழனி நெற்கதிராய் நிறைந்த அனுபவ கனத்தால் நெக்குருகி, நின் தாள் நோக்கி பணிந்து நன்றி செப்புகிறேன் என் குருநாதா!*

*சித்தமல்லி க்ஷேத்திரத்தில்* ***ஸ்ரீ நீலகண்ட விநாயகர் ஆலய, ஸ்ரீ ஸ்ரீதேவி ஸ்ரீபூதேவி சமேத வரதராஜ பெருமாள் ஆலய, ஸ்ரீ அபிராமி சமேத ஸ்ரீ குலசேகர ஸ்வாமி ஆலயங்களின் கும்பாபிஷேகப் பணிகளிலும்,*** *எங்களுடைய இயலாமையினால் ஏற்பட்டிருக்கக்கூடிய விட்டகுறை, தொட்டகுறை அனைத்தையும் க்ஷமித்து எங்கள் சிற்சிறு கைங்கர்யங்களையும் ஏற்றுக்கொண்டு அநுகிரஹிக்க வேண்டுகிறோம்.*

*எஞ்சியிருக்கும் காலமெல்லாம் இதுபோல இறைப்பணியும், குருபணிவிடையும் எனக்கும், என் சுற்றத்தாருக்கும் கிட்ட நின் கடாட்சமும், ப்ரஹ்மத்தின் பரிவும் கிட்டுதற்கு நின் ஆசியையும் வேண்டி நின்றேன் கடையோள் ....*

***- மஹாலக்ஷ்மி சுப்ரமணியன், மஹாலக்ஷ்மி சாரிட்டபிள் டிரஸ்ட், தியாகராய நகர், சென்னை 600017***

***ப்ரஹ்மமே பணித்தலும், ப்ரஹ்மமே பணி முடித்தலும், ப்ரஹ்மமே வியத்தலும் என்றான பின்னர் எனெக்கேது பிரத்யேக பளுவும், புளங்காகிதமும்!***

**இக்கும்பாபிஷேக வேள்வியில் பங்கு கொண்டு ஆன்மீக ஆன்றோர்கள் அனைவரும் சித்தமல்லி ஸ்ரீ நீலகண்ட விநாயகர், ஸ்ரீதேவி ஸ்ரீபூதேவி சமேத ஸ்ரீ வரதராஜ பெருமாள், ஸ்ரீ அபிராமி அம்பாள் ஸமேத ஸ்ரீ குலசேகர ஸ்வாமியின் அருளுக்கு பாத்யமாக வேண்டுமென்று பணிவன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.**

இவண்,

| | |
|---|---|
| திரு செல்லத்துரை – 97880 50170<br>கும்பாபிஷேக ஒருங்கிணைப்பாளர்<br>**ஆன்மீக அன்பர்கள்,**<br>**கிராம மக்கள்** | **திருமதி மஹாலக்ஷ்மி சுப்ரமண்யம் – 98400 53289**<br>திரு VC சுப்ரமணியன் – 99400 53289<br>மஹாலக்ஷ்மி சேரிட்டபிள் டிரஸ்ட், சென்னை |

இம்மூன்று சுத்தமல்லி கோயில்களின் திருப்பணி வேள்வியை சிரமேற்கொண்டு, தலையாய கட்டுமானப் பணிகளையும், நிர்மாணப்பணிகளையும் மேற்கொண்டு, இக்கும்பாபிஷேகப் பணியை செவ்வனே முடிக்க அனுக்ரகித்து ஆசீர்வதித்த **ஸ்ரீ காஞ்சி காமகோடி மடம் 70-வது பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகளின்** பாதரவிந்தங்களில் நமஸ்கரித்து; கும்பாபிஷேக வேள்வியை நடத்த எங்களுக்கு வாய்ப்பளித்த **தமிழக அரசு இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயில் செயல் அலுவலருக்கும், நிர்வாகக் குழுவிற்கும்** நன்றியையும், வந்தனங்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**- திருமதி மஹாலக்ஷ்மி சுப்ரமண்யம்**

# விழா நிகழ்ச்சி நிரல்

| | ஸ்ரீ அபிராமி அம்பாள் ஸமேத ஸ்ரீ குலசேகர ஸ்வாமி ஆலயம் | | ஸ்ரீ ஸ்ரீதேவி ஸ்ரீ பூதேவி சமேத ஸ்ரீ வரதராஜப்பெருமாள் திருக்கோயில் | |
|---|---|---|---|---|
| ஆவணி 22<br>7/9/25<br>ஞாயிறு | காலை<br>10:30<br>மணி | சதய நட்சித்திரம் சித்த யோகம் சுபா வேளையில் அனுக்ஞை, ஸ்ரீ விக்னேஸ்வர பூஜை, மஹாகணபதி நவகிரஹ ரக்ஷோக்ன ஹோமங்கள், லட்சுமி ஹோமம், அருட்ப்ரஸாதம் | மாலை<br>6:00 மணி | ஆச்சார்யன் அழைப்பு, பகவத் சங்கல்பம், யஜமானர்அனுக்ஞை |
| ஆவணி 23<br>8/9/25<br>திங்கள் | காலை 9<br>மணி | வாஸ்து சாந்தி, பிரவேச பலி, பிரசன்ன அபிஷேகம் | காலை<br>9:00 மணி | வாஸ்து சாந்தி, பிரவேச பலி |
| | மாலை 3<br>மணி | அக்னி சங்கிரஹணம், புனித நீர் எடுத்தல் , மிருத் சங்கிரஹணம், அங்குரார்ப்பணம், ஆச்சார்ய ரக்ஷபந்தனம், கும்ப அலங்காரம் , கலாகர்ஷணம், யாகசாலை பிரவேசம், | மாலை 3<br>மணி | அக்னி சங்கிரஹணம், புனித நீர் எடுத்தல் , கலாகர்ஷணம் , யாகசாலை பிரவேசம்,<br>ஹோமங்கள், பூர்ணாஹுதி, மங்கள ஆரத்தி, அருட்ப்ரஸாதம் |
| | இரவு<br>9:00 மணி | பூர்ணாஹுதி, தீபாராதனை, அருட்ப்ரஸாதம் | | |
| ஆவணி 24<br>9/9/25<br>செவ்வாய் | காலை<br>9:00 மணி | விசேஷ சந்தி, திரவிய ஹோமங்கள், | | கால சந்தி பூஜை, பூர்ணாஹுதி, மங்கள ஆரத்தி, அருட்ப்ரஸாதம் |
| | நண்பகல்<br>12:00 மணி | பூர்ணாஹுதி, மஹா தீபாராதனை, அருட்ப்ரஸாதம் | | |
| | மாலை 5<br>மணி | விசேஷ சந்தி, திரவிய ஹோமங்கள், பூர்ணாஹுதி, தீபாராதனை, அருட்ப்ரஸாதம் | மாலை 6<br>மணி | காலசந்தி பூஜை, புண்யாவாஹம், திரவிய ஹோமங்கள், மங்கள ஆரத்தி, அருட்ப்ரசாதம் |
| ஆவணி 25<br>10/9/25<br>புதன் | காலை<br>9:00 மணி | விசேஷ சந்தி, திரவிய ஹோமங்கள், | | சுப்ரபாதம், திவ்ய பாசுரங்கள் பெருமாளிடம் சமர்ப்பித்தல், திரவிய ஹோமங்கள்,<br>பூர்ணாஹுதி, மங்கள ஆரத்தி, அருட்ப்ரஸாதம் |
| | நண்பகல்<br>12:00 மணி | பூர்ணாஹுதி, தீபாராதனை, அருட்ப்ரஸாதம் | | |
| | மாலை 5<br>மணி | விசேஷ சந்தி, 5ஆம் கால யாகபூஜை, ப்ரஹ்மச்சாரி பூஜை, சுகாசினி பூஜை, கன்யா பூஜை, தம்பதி பூஜை, திருமுறை பாராயணம்,<br>பூர்ணாஹுதி, தீபாராதனை, அருட்ப்ரஸாதம் | மாலை 5<br>மணி | விஸ்வரூபம், புன்யாவாஹம், பெருமாளுக்கு தைலக்காப்பு, திருமஞ்சனம், திரவிய ஹோமங்கள், மங்கள ஆரத்தி, அருட்ப்ரஸாதம் |

| | | | | |
|---|---|---|---|---|
| ஆவணி 26<br>11/9/25<br>வியாழன் | *காலை 5:00 மணி* | கோ பூஜை,   யாத்ரா தானம் | | |
| | *காலை 7:30 மணி* | ஸ்பர்ஷாஹூதி, மஹா பூர்ணாஹூதி, மஹா தீபாராதனை | | |
| | *காலை 7:30 மணி* | கன்யா லக்னத்தில் ஸ்ரீ நீலகண்ட விநாயகர் ஆலய கும்பாபிஷேகம் | *காலை 9 – 10 மணி* | துலா லக்னத்தில் பெருமாள் கோயில் மஹா கும்பாபிஷேகம் |
| | *காலை 10:30 – 11:30 மணி* | விருச்சிக லக்னத்தில் சிவாலய கும்பாபிஷேகம் | | |
| | *மாலை 5 - 6 மணி* | கும்ப லக்னத்தில் சுவாமி-அம்பாள் திருக்கல்யாண உற்சவம் | *மாலை 5 - 6 மணி* | கும்ப லக்கினத்தில் தாயார்-பெருமாள் திருக்கல்யாண உற்சவம் |
| | *மாலை 6:30 மணி* | ஸ்வாமி புறப்பாடு | *மாலை 6:30 மணி* | பெருமாள் திருவீதி உலா |

**சிறப்பு நாதஸ்வர மங்கள இசை**

**திருவாவடுதுறை ஆதீன ஆஸ்தான நாதஸ்வர கலைச்செல்வன்**

இலுப்பப்பட்டு திரு SS அரவிந்த் குழுவினர்



**கும்பாபிஷேக சர்வசாதகம்**

**ஆகம ரத்னா, சிவகாம சக்ரவர்த்தி**

**ஸ்ரீ காசி இராமகிருஷ்ண சிவாச்சாரியார்**

**ஆலய அர்ச்சகர்**

**ஸ்ரீ M சிவராஜ் குருக்கள்**

**ஆலய புனரமைப்பு & யாகசாலை கட்டுமானம்**

**ஸ்தபதி திரு ரமேஷ்குமார், குத்தாலம்**

**வேத பாராயணம்**
**ஸ்ரீ சிவார்ப்பணம் டிரஸ்ட் ஸ்ரீ சந்திரமௌலி ஒருங்கிணைப்பில்**

**திருமுறை பாராயணம்**
**ஸ்ரீ கதிர்வேல் ஓதுவார் தலைமையில்**

**உங்கள் வருகையை அன்புடன் எதிர்நோக்குகின்றோம்.**

**திருமதி மஹாலக்ஷ்மி சுப்ரமண்யம் – 9840053289**     **திரு VC சுப்ரமணியன் – 99400 53289**

**மஹாலக்ஷ்மி சேரிட்டபிள் டிரஸ்ட், சென்னை**